DMJ COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 90 /2022, Mangalamedu P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கப்பல்ராஜ் | Nationality | : | - |
| Father/ Husband Name | : | செல்வரத்தி னசெல்வன் | Occupation | : | டிரைவர் |
| Village | : | மலையநாமபுர ம் | Religion | : | - |
| Taluk | : | தென்காசி | Age | : | 54 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 10.07.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். நான் 30 வருடமாக டிரைவராக இருந்து வருகிறேன். நான் எனக்கு சொந்தமான பதிவெண் TN 74 AQ 5312 என்ற ஈச்சர வாகனத்தை கேராளாவில் இருந்து சென்னை செல்வதற்காக கெமிக்கல் பவுடர் ஏற்றி கொண்டு நானும் எனது தம்பியும் மேற்படி வாகனத்தை மாறி மாறி ஓட்டிக்கொண்டு வந்தோம். அப்பொழுது 25.04.2022 ம் தேதி திருமாந்துறை டோல்கேட் அருகே வந்தபோது எங்களுக்கு முன்னால் திராட்சை ஏற்றி கொண்டு வந்த மினி வாகனம் கவிழ்ந்து போக்குவரத்தை நிறுத்தி சீர் செய்து கொண்டிருந்தார்கள்.

2. என்னுடைய வாகனத்தை நான் நிறுத்தி இருந்தேன். எனது வாகனத்திற்கு பின்னால் டமால் என்று சத்தம் கேட்டது. நான் இறங்கி சென்று பின்னால் பார்த்தபோது சிப்ட் கார் ஒன்று எனது வாகனத்தில் மோதி உள்ளே சேசில் சொருகி இருந்தது. மேற்படி சிப்ட் வாகனத்திற்கு பின்னால் 14 சக்கரங்கள் கொண்ட லாரி சிப்ட் காரை மோதியதால் விபத்து ஏற்பட்டிருந்தது. சிப்ட் காரில் 5 நபர்கள் இருந்தார்கள். அதில் ஒரு 7 வயது பையன் மட்டும் காலில் காயம் ஏற்பட்டு உயிரோடு இருந்தான், காயம் பட்ட 4 பேரில் மூவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டனர். ஒரு பெண் ஒரு மணி நேரம் உயிரோடு இருந்தார் பிறகு இறந்துவிட்டார். மேற்படி 4 பேரின் பிரேதங்களை சிப்ட் காரில் இருந்து எடுப்பதற்கு 3 மணிநேரம் ஆனது.

3. சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைதுதான். மேற்படி புகாரில் உள்ள **கையெழுத்து அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு**

செய்யப்படுகிறது.மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. அப்போது வண்டியில் யாரும் இல்லை. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் யார் வண்டியை ஓட்டினார் என்றால் எனது தம்பி முருகன் ஓட்டினார். அப்போது நான் பக்கத்து சீட்டில் அமர்ந்து இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது போலிசார் அங்கேயே தான் இருந்தார்கள். நான் ஆம்புலன்சுக்கு போன் செய்தேனா என்றால் இல்லை. ஏற்கனவே வேன் கவிழ்ந்து கிடந்த இடம் இந்த சம்பவ இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1/4 கி.மீ தூரம் இருக்கும். ஏற்கனவே விபத்து நடந்த இடத்திற்கு முன்னதாகவே வண்டிகள் நிறுத்தப்பட்டு 5 நிமிடங்கள் இருக்கும் என்றால் சரிதான். விபத்து சம்பவம் நடந்தபோது நான் முன்னாடி இருந்ததால் பின்னாடி என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. சத்தம் கேட்டுதான் தெரிந்தது.

2. சம்பவம் நடந்து அன்று காலை 7.30 மணி வரை நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். 7.30 மணிக்கு பின்புதான் எங்கள் வண்டியை நாங்கள் எடுத்து சென்றோம். நான் தான் காவல் நிலையத்திற்கு ஓட்டி சென்றேன். கனரக வாகனங்கள் நெடுஞ்சாலையின் இடது புறம்தான் செல்லும் என்பதுதான் விதி என்றால் சரிதான். எனது வாகனமும் சாலையின் இடது புறம்தான் சென்றது என்றால் சரிதான். எனது வண்டியின் முன் கார் சென்றது என்ன கார் என்று எனக்கு தெரியாது. காருக்கு முன் டாரஸ் வண்டி நின்றது. டிராபிக் சரிசெய்ததும் டாரஸ் வண்டி சென்றுவிட்டது.

3. காவல் நிலையத்திற்கு காலை 7.45 மணியளவில் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். புகார் நான்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் 5ம் வகுப்பு வரைதான் படித்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சம்பவத்தில் இறந்துபோனவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது. புகாரை நான்தான் எழுதினேன். போலிசார் சொன்னார்களா என்றால் வேறு யாரோ சொன்னார்கள் நான் எழுதினேன். எழுதிய பிறகு படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் என்று நினைக்கிறேன். காலை 7.45 மணிக்கு பிறகுதான் புகாரை எழுதினேன். புகாரில் உள்ள வாசகங்கள் அனைத்தையும் எனக்கு ஒரு நபர் சொல்லிகொடுத்துதான் எழுதினேன் என்றால் சரிதான்.

DMC,UMURT,KUNNAM

4. புகார் கொடுத்த பிறகு எப்போது காவல் நிலையத்தில் இருந்து வெளியே சென்றோம் என்றால் மறுநாள் தான் சென்றோம். புகாரை நான் எழுதியபோது எனது தம்பி முருகனும் அருகில் தான் இருந்தார். புகாரை நான் எழுதி கொடுத்தபோது என்னை விசாரித்ததோடு சரி அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. புகார் கொடுத்தபிறகு நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர்களின் குடும்பத்திற்கு இன்சூரன்ஸ்க்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJMCOURT, KUNNAM